**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**
**வடக்கு மாகாண சபை.**

**ஆர்வ வெளிப்பாட்டுக்கான (EOI) கோரிக்கை**
**பனை மானமியம் ஆராய்ச்சி நிதி - 2020/21**

**விடயம் :-** வடக்கு மாகாணத்தில் உள்ள பனை சார் உற்பத்திகளில் ஈடுபடும் தொழிலாளர் வர்க்கத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிகள் பற்றிய ஆர்வ வெளிப்பாட்டுக்கான விண்ணப்பம் கோரல்.

வருடந்தோறும் யூலை 22-28 வரையான காலப்பகுதியில் தால காவலர் அமரர் திரு.க.கனகராசா அவர்களின் சிரார்த்த தினத்தையொட்டி "பனை மான்மியம்" என்ற பெயரில் பனையெழுச்சி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் வழிகாட்டுதல்களுடன், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுகள் மற்றும் அமைப்புக்களினால் விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வருடமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொண்டாடப்படவுள்ள இந்நிகழ்வில் "பனை மான்மிய ஆராய்ச்சி நிதி" என்ற திட்டமொன்று அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றது.

சமூக பொருாதார மேம்பாட்டுக்கான ஆராய்ச்சிகளுக்கான விடயத்தை உள்ளடக்கிய ஆர்வ வெளிப்பாட்டு விண்ணப்பங்களை பல்கலைக்கழக இளமானி மற்றும் முதுமானி மாணவர்கள் உள்ளிட்ட ஆர்வமுள்ளவர்கள் எவரும் தங்கள் விபரங்களுடன் சுயமாக தயாரித்து கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

குறித்த விண்ணப்பங்களில் ஆராய்ச்சிக்கு உத்தேசிக்கப்படும் விடயத்தை பரிசீலிக்கும் குழுவொன்றால் பொருத்தப்பாடுடையவை தெரிவு செய்யப்பட்டு விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான அதியுச்ச நிதி உதவித்தொகையாக, ஒவ்வொரு ஆராய்ச்சிக்கும் ரூபா.10000.00 ஐ மூன்று கட்டங்களாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கட்டம் 1 :- தெரிவு செய்யப்பட்ட விடயத்தலைப்பிற்கேற்ப முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளல்.

கட்டம் 2 :- சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்விற்குப் பின்னரான அவதானிப்புக்கள் மற்றும் போக்குகள் பற்றி இடைக்கால அறிக்கையிடல்.

கட்டம் 3 :- இறுதி ஆராய்ச்சி அறிக்கையை / கட்டுரையை சமர்ப்பித்தல்.

குறித்த ஆராய்ச்சிக்காக 8 மாதங்கள் வரையான காலப்பகுதி வழங்கப்படும். இறுதி ஆராய்ச்சி அறிக்கைகள் / கட்டுரைகள் "பனை மான்மியம்" நிகழ்வில் வெளியிடப்படும் தாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

இது பற்றிய மேலதிக தகவல்களினை திணைக்கள கடமை நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்வதோடு ஆர்வ வெளிப்பாட்டு விண்ணப்பங்களினை எதிர்வரும் 31.08.2020 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் ,கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும்,
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம். வடக்கு மாகாண சபை. முதியோர் இல்ல வளாகம், கைதடி.
*மின்னஞ்சல் முகவரி :-* ccdnp@mail.com. *தொலைபேசி இலக்கம் :- 0212057063*

*22.07.2020*